| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர். சி. உஷாராணி, M.Sc.,B.Ed.,Ph.D.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள். |

**ந.க.எண். 104661/NMMS/2019** **நாள் : 27 .11 .2019**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய வருவாய்வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS), டிசம்பர் 2019 அறிவுரைகள் வழங்குவது குறித்து.

– – – –

01.12.2019 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய்வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS), டிசம்பர் 2019 தேர்விற்கான தேர்வு மையங்களின் பட்டியல் (இணைப்பு பள்ளிகளுடன்) ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்காண் தேர்வு நடத்துவது குறித்து கீழ்க்காண் அறிவுரைகளை அனைத்து தேர்வுமைய கண்காணிப்பாளர்களும் தவறாமல் கடைபிடிக்க உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. **2019 தேசிய வருவாய்வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS), கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறும்.**

| நாள் | பாடம் | நேரம் |
|---|---|---|
| 01.12.2019 (ஞாயிற்றுக்கிழமை) | பகுதி I – MAT - Paper I மனத்திறன் தேர்வு, (Mental Ability Test ) | காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை |
| | Break Time 11.00 am to 11.30 am | |
| | பகுதி II SAT - Paper II படிப்பறிவுத் தேர்வு (Scholastic Aptitude Test) | காலை 11.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**குறிப்பு: காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை** உள்ள Break time-ல் தண்ணீர் குடிக்க சிற்றுண்டி (Snacks) சாப்பிட மற்றும் கழிப்பறை செல்ல மட்டும் தேர்வர்களை அனுமதிக்குமாறு அறிவுறுத்த வேண்டும். தேர்வு முடியும் வரை எக்காரணம் கொண்டும் தேர்வர்களைத் தேர்வு மையத்தினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது.

2. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தங்கள் மையத்திற்கான பெயர்ப்பட்டியல், தேவையான வினாத்தாள் மற்றும் OMR விடைத்தாட்கள் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள உரிய அறிவுரை வழங்க வேண்டும்.
3. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 வினாத்தாள் மற்றும் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே, எக்காரணம் கொண்டும் 20 மாணவர்களுக்கு மேல் ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது.
4. **OMR விடைத்தாள் பகுதி1 மற்றும் பகுதி 2 ஆகிய இரண்டு தேர்விற்கும் சேர்த்து ஒரு தேர்வருக்கு ஒரு விடைத்தாள் (O.M.R Sheet) பதிவெண்ணின் படி வழங்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட O M R Answer Sheet அவர்களுடைய பதிவெண்ணிற்குரியவைதானா என்பதை உறுதி செய்து கொண்டு மாணவர் மற்றும் அறை கண்காணிப்பாளர் கையொப்பமிட வேண்டும்.**

5. வினாத்தாளை பொறுத்த வரை பகுதி I மனத்திறன் (Mental Ability Test) தேர்விற்கான வினாத்தாட்கள் தேர்வு துவங்குவதற்கு கால் மணி நேரம் முன்னதாக அதாவது காலை **9.15** மணிக்கும், பகுதி II படிப்பறிவுத் தேர்விற்கான (Scholastic Aptitude Test) வினாத்தாள் காலை **11.15** மணிக்கும் பிரிக்கப்பட்டு முறையே காலை 9.30 / 11.30 மணிக்கு தேர்வர்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும். காலை 9.30 மணி முதல் பிற்பகல் **1.00** மணி வரையிலான காலத்தில் தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் தேர்வு மையத்திலிருந்து வெளியில் செல்ல அனுமதிக்கக்கூடாது.

6. அனுமதிச்சீட்டு (Admission Card) உள்ள தேர்வர்கள் மற்றும் பெயர் பட்டியலில் பெயர் உள்ள தேர்வர்களை மட்டும் தேர்விற்கு அனுமதிக்கப்பட வேண்டும். **புறச்சரக எண்ணில் (Out of Range Number) தேர்வெழுத கட்டாயமாக அனுமதி மறுக்கப்படுகிறது. புறச்சரக பதிவெண்ணில் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டால் அதற்கான தேர்வு முடிவுகள் வெளியிடும்போது எழும் பின்விளைவுகளை முதன்மைக் கல்வி அலுவலர்களே எதிர்கொள்ள வேண்டும்.** எனவே தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும்பொருட்டு புறச்சரக எண்ணில் தேர்வெழுத அனுமதி வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

7. தேர்விற்கு வருகைபுரிந்த தேர்வர்களின் OMR விடைத்தாளில் present **P** என கருப்பு மையினால் நிழற்படுத்த வேண்டும். வருகைபுரியாத தேர்வர்களின் OMR விடைத்தாளில் Absent **A** என சிவப்பு மையினால் நிழற்படுத்த வேண்டும்.

8. நுழைவுச்சீட்டில் **புகைப்படம் மாறியிருந்தாலோ** அல்லது புகைப்படம் இல்லாமல் இருந்தாலோ, அதே நுழைவுச்சீட்டில் **உரிய தேர்வரின் புகைப்படம் ஒட்டி அதில் பள்ளித்தலைமையாசிரியரின் சான்றொப்பம் பெற வேண்டும்.**

   **தேர்வு நாளன்று வழங்கப்படும் OMR Sheet லும் புகைப்படம் மாறி / இல்லாமல் இருந்தால், அந்த OMR தாளிலேயே உரிய புகைப்படத்தினை பசையினால் ஒட்டி (Stappler அல்லது பின் போடக்கூடாது) தேர்வர்களுக்கு வழங்க வேண்டும் என பள்ளித் தலைமையாசிரியர் / முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.**

9. பெயர்ப்பட்டியலில் பெயர், **தலைப்பெழுத்து, பிறந்த தேதி, இனம் (Classification) ஆகியவற்றில் திருத்தம் ஏதேனும் இருப்பின் உரிய திருத்தம் செய்து சான்றொப்பமிட்டு, பெயர்பட்டியலின் இறுதியுள்ள Abstract-ஐ பூர்த்தி செய்து தலைமைக் கண்காணிப்பாளரின் கையொப்பம் பெற்று OMR விடைத்தாட்களுடன் தேர்வு நாளன்றே ஒப்படைக்க வேண்டும்.**

10. தேர்வு முடிவடைந்தவுடன் ஒவ்வொரு முதன்மைக் கல்வி அலுவலகங்களிலும் ஒரு **Collection Point–டினை ஏற்படுத்தி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் கட்டுகள் / திருத்தப்பட்ட பெயர் பட்டியல் /** உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்களைப் பெற்று தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மைய வாரிப் பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்த்து தேர்வு நாளான **01.12.2019** அன்றே சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்கான **போக்குவரத்து செலவினத்தினை அரசாணை (ப) எண் 116இ பள்ளிக்கல்வித்துறை (ஜிஇ1) துறை, நாள்: 08.03.2018-ல் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.**

இந்த நடைமுறை **காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை** முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்குப் பொருந்தாது. இம்மூன்று முதன்மைக் கல்வி அலுவலர்கள் மட்டும் தேர்வு நாளான **01.12.2019** அன்றே கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாக துணை இயக்குநர்(பல்வகை தேர்வுகள்)(பொ) அவர்களிடம் மந்தனக் கட்டுகளை ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதற்கான போக்குவரத்து செலவினத்தினை மேற்கூறிய அரசாணைப்படி சென்னை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முதன்மைக் கல்வி அலுவலர், சென்னை – **01.12.2019** அன்று மதியம் **2.30** மணிக்குள் ஒப்படைக்க வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் – **01.12.2019** அன்று மாலை **5.00** மணிக்குள் ஒப்படைக்க வேண்டும்.

## <u>ஒப்படைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம்:</u>

| <u>திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய பொருட்களின் விவரம்</u> | <u>அமைய வேண்டிய கட்டுக்கள்</u> | **<u>ஒப்படைக்க வேண்டிய அலுவலகம்</u>** |
|---|---|---|
| 1.**i**) உபயோகிக்கப்பட்ட விடைத்தாட்கள் (Used O.M.R.AnswerSheet)<br>ii) உபயோகிக்கப்படாத விடைத்தாட்கள் (Unused OMR Answer Sheets) | **<u>தனிக்கட்டு (</u>**<u>Sealed Packet I)</u><br>**<u>கட்டின் முன்பகுதி</u>**<br>இணை இயக்குநர்(மேல்நிலை) அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6. | தேர்வு நாளன்றே சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். |
| **2.** திருத்தப்பட்ட பெயர் பட்டியல் (Corrected Nominal Roll) | **<u>தனிக்கட்டு (</u>**<u>Sealed Packet II)</u> | |
| **3.** உபயோகிக்கப்படாத வினாத்தாள் புத்தகங்கள் (Unused Question Booklets) | **<u>தனிக்கட்டு (</u>**<u>Sealed Packet III)</u> | **32** மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் – இந்த கட்டினை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவவகங்களிலேயே வைத்து பின்னர் கழிவுத்தாளாகக் கருதி அப்புறப்படுத்த அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |

ஒம்/–

**இயக்குநர்**

**<u>இணைப்பு :</u>** தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கான முக்கிய அறிவுரைகள்

**<u>நகல்:</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்– மேலே குறிப்பிட்டுள்ளபடி வ.எண் I(i)& I(ii), 2 மற்றும் **3** என **4** கட்டுகளைத் தனித்தனியாகப் பெற்று கட்டு **3–**னை மட்டும் மண்டல அலுவலகத்திலேயே வைத்திருந்து கட்டு I(i), I(ii) மற்றும் **2–**னை மட்டும் Logistics Lorry மூலமாக தலைமையலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், விடைத்தாட்களை அனுப்புவது குறித்து தகவல் தெரிவிக்கப்படும்.

## தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு முக்கிய அறிவுரைகள்:

1. தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் வினாத்தாள் புத்தகத்தில் (Question Booklet) விடைகளைக் குறிக்க வேண்டாம் என்றும், வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் மட்டுமே (OMR Answer Sheet) விடைகளைக் குறிக்க வேண்டும் என்பதனையும் தேர்வர்களுக்கு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களின் மூலம் அறிவுறுத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 20 வினாத்தாள் மற்றும் விடைத்தாள் மட்டுமே வழங்கப்படும். எனவே எக்காரணம் கொண்டும் 20 மாணவர்களுக்கு குறைவாகவோ அல்லது அதற்கு மேலோ ஒரு தேர்வறையில் அமர அனுமதிக்கக்கூடாது. (கடைசி அறை தவிர)

3. தேர்வு முடிந்தவுடன் தேர்வர்கள் வினாத்தாள் புத்தகத்தை (Question Booklet) எடுத்துச் செல்லஅனுமதிக்கப்படுகிறது.

4. இத்தேர்விற்கு (OMR ANSWER SHEET) விடைத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் **தேர்வர்கள் விடைத்தாளில் உள்ள கலங்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளன. அனைத்து தேர்வறைகளிலும் தேர்வர்கள் விடைத்தாட்களைப் பூர்த்தி செய்வது குறித்த அறிவுரைகளைத் தேர்வு அறைக் கண்காணிப்பாளர்கள் மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.** தவிரவும் ஒவ்வொரு விடைத்தாளில் தேர்வர் தேர்விற்கு வருகைபுரிந்த விவரம் (Status of Candidate) P Or A என கருப்பு அல்லது சிவப்பு நிற மையினால் அறை கண்காணிப்பாளரால் (Hall Supervisor) நிழற்படுத்த வேண்டும்.

5. அறைக் கண்காணிப்பாளர் தேர்வர்களின் பதிவெண் மற்றும் பெயர் ஆகிய கலங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின் அவர் கையொப்பமிட வேண்டும். இவ்வறிவுரைகளைத் தவறாது பின்பற்றுமாறு தேர்வு அறைக் கண்காணிப்பாளர்களுக்கு முதன்மைக் கண்காணிப்பாளரால் தக்க அறிவுரைகள் வழங்கப்படல் வேண்டும். தேர்வர்கள் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டத்தில் தேதியுடன் கையொப்பமிட வேண்டும். தேர்வர்கள் பதிலளிக்கும்போது தாம் எந்த கலத்திற்கான விடை சரி என நினைக்கிறாரோ அந்த கலம் கருப்பு மை கொண்ட பால் பாய்ண்ட் பேனாவினால் மட்டுமே நிழற்படுத்தப்பட வேண்டும்.

6. பெயர் பட்டியலில் திருத்தத்தினையும் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்தம் அனைத்தும் சிவப்பு மையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும். மேலும் வருகைப்புரிந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் OMR விடைத்தாட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**